**தலைப்பு 285 – விவசாயத் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

விவசாயத் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் விவசாயத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தித்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

  எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ)பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது.

(ஆ) விவசாயத் திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.6.1 கணக்குகளைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2000 மே 10 ஆந் திகதிய அமைப/00/680/08/040 ஆம் இலக்கம் மற்றும் 1996 மார்ச் 21, ஆந் திகதிய 96/0775/105/032 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானங்களின் பிரகாரம் 05 முற்பணக் கணக்கு செயற்பாடுகளை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தன. நிதிப் பிரமாணம் 518(3) இன் பிரகாரம் முற்பண செயற்பாடுகள் மூடப்பட்டதன் பின்னர் வரும் மாதத்தில் கலைக்கும் நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட வேண்டியிருந்தன. இருப்பினும், 14 ஆண்டுகள் முதல் 26 ஆண்டுகள் வரையான காலம் கடந்திருந்த போதும் கலைத்தல் நடவடிக்கைகள் பூரணப்படுத்தப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தாமதம் ஏற்பட்டிருந்தால் தாபன விதிக் கோவையின் XLVII அத்தியாயத்தின் 8.1 மற்றும் 8.2 பிரிவின் பிரகாரம் அமைச்சின் செயலாளர்' திணைக்களத் தலைவரினால் உரிய உத்தயோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். | இந்த ஐந்து கலைப்புக் கணக்குகளையும் அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று சமர்ப்பிக்கப்பட்டு இல்லமலாக்கி மூடி முஎவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

#### 1.6.2 வர்த்தக முற்பணக் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கருதுகோள் கட்டணங்கள் சீராக்கப்பட்டதன் பினன்ர் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 135,093,450 ஆல் குறைவடைந்திருந்தன. | வர்த்தக முற்பணக் கணக்கில் இலாபத்தை அதிகரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவித்திருக்கவில்லை. |
| (ஆ) முற்பண செயற்பாட்டிற்குரிய மூலதனச் சொத்துக்களில் பெறுமானத்தேய்வுப் பெறுமதி மற்றும் பெறுமானத் தேய்வு | சொத்துக்களின் பெறுமானத்தேய்வு சரியாக கணக்கிடப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் உரிய நிலைக்கு கொண்டு வருவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | நிதியத்தின் பெறுமதி சரியாக கணக்கிட வேண்டும். | | தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |
| (இ) | சொத்துக்கள் வகைப்படுத்தப்பட்டு கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் அதன் பிரகாரம் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருக்கவில்லை | சொத்துக்கள் வகுப்புகளாக வெவ்வேறாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் | மேலும் தடவையபாக கொண்டு எதிர்காலத்தில் இவ்வகைப்படுத்தலை சரியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஈ) | நிலையான சம்பளத்தில் 85 சதவீதம் உற்பத்திக் கணக்கிலும் எஞ்சிய 15 சதவீதம் இலாப நட்டக் கணக்கிலும் குறிப்பிடப்பட்டிருந்த போதும் கணகீட்டு அடிப்படை மற்றும் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தினால் பின்பற்றப்படும் கணக்கீட்டு அடிப்படை மற்றும் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும் | முற்பணக் கணக்கில் கொடுப்பனவு செய்யப்படும் சம்பளங்களிலிருந்து நேரில் செலவினமாக இலாப நட்டக் கணக்கிலும் எஞ்சிய 85 சதவீதம் நேரடியாக உற்பத்திக் கணக்கிற்கும் உரித்தாவதால் அதில் காட்டப்பட்டுள்ளன. |
| (உ) | வர்த்தக முற்பணக் கணக்கில் நடவடிக்கைகளுக்கரிய 75 நிறுவனங்களில் சொத்துக்கள் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் அந்த ஒவ்வொரு நிறுவனத்தினாலும் பங்களிப்பின் பிரகாரம் நிலையான சொத்துக்களை கணக்கீடு செய்தல் மற்றும் பெறுமானத்தேய்வுக் கொள்கை திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | நிறுவனம் பின்பற்றும் பெறுமானத்தேய்வு கொள்கைகள் அடிப்படையில் பெறுமானத்தேய்வு செய்து உரிய சீராக்கங்கள் செய்யப்பட வேண்டும் | எம்மால் செய்யப்பட்டுள்ள பெறுமானத்தேய்வுக் கொள்கை சரியானதாகும் |
| (ஊ) | கரதியனாறு விவசாயப் பண்ணைக்குச் சொந்தமான 15 கட்டிட விடயங்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | நிலையான சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அப்பெறுமதி புத்தகங்களுக்கு கொண்டு வரப்பட வேண்டும். | யுத்தம் நிறைவு பெற்றவுடன் செயற்படுத்தப்பட்டு தற்போது மேம்படுத்தப்பட்டு வருகின்றது. |
| (எ) | கரதியனாறு பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு 2018 யூன் மாதம் கிடைத்த மோட்டார் சைக்கிளின் பெறுமதி மதிபபிடப்பட்டு அதற்குரிய பெறுமானத்தேய்வு கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் 2014 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் கிடைத்தருந்த 03 மோட்டார் வண்டிகளின் ஆரம்ப பெறுமானத்தேய்வு ரூபா 769,155 கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. அதற்கு மேலதிகமாக மொட்டார் வண்டிகளின் பெறுமானத் தேய்வு ரூபா | நிலையான சொத்துக்களின் பெறுமதி குறித்த ஆண்டுகளின் புத்தகங்களுக்கு கொண்டு வரப்பட்டு அதன் பிரகாரம் பெறுமானத் தேய்வு ஏற்பாடு செய்யப்பட வேண்டும். | உங்களது சுட்டிகாட்டல் பின்பற்றப்பட்டு நிதிப்பிரமாணம் 515 இன் ஏற்பாடுகள் அடிப்படையில் இச்சீராக்கம் செய்யப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | 203,085 ஆல் குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (எ) | வவுனியா பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தில் காணப்பட்ட ரூபா 3,540,587 பெறுமதியான இயந்திராதிகள் இரண்டு முறை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நிலையான சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | - மேற்படி - |
| (ஏ) | கன்னோருவ மரக்கறி விதை நிலையத்திலிருந்து அகற்றிய இயந்திரங்களின் பெறுமதி ரூபா 3,417,280 ஆல் கூடுதலாக காட்டப்பட்டமையால் ஆண்டின் பெறுமானத்தேய்வு ரூபா 170,864 ஆல் கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியான பெறுமானத்தேய்வு அளவு கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் | அகற்றப்படும் ஆண்டிற்கு பெறுமானத்தேய்வு செய்யப்படுவதில்லை |
| (ஐ) | பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகமொன்றிலும் 03 விவசாயப் பண்ணைகளிலம் உழவு இயந்தரம், டெயலர் மற்றும் மோட்டார் வண்டிகளின் திரட்டிய தேய்வு 1,266,050 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியான ஆரம்ப திரட்டிய பெறுமானத்தேய்வு அளவு கணக்குகளில் உட்படுத்த வேண்டும் | அவ்வப்போது கண்டுபிடிக்கப்படும் உருப்படிகளில் மீண்டும் பெறுமானத்தேய்வு கணக்கிடப்பட்டு திருத்தம் செய்யப்படுகின்றது. அதன் பிரகாரம் எம்மால் செய்யப்பட்டுள்ள கணக்கிடல் சரியானதாகும் |
| (ஒ) | சீதாஎலிய விதை கிழங்கு களஞ்சியத்தில் காணப்பட்ட ரூபா 5,012,700 ஆன உழவு இயந்திரம் மற்றும் டேலர் சொத்துக்களாக கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டிற்குரிய பெறுமானத் தேய்வு ரூபா 125,318 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிலையான சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அப்பெறுமதி புத்தகங்களுக்கு கொண்டு வரப்பட்டு பெறுமானத் தேய்வு செய்யப்பட வேண்டும். | இச்சொத்துக்கள் தொடர்பாக முதலாவது பதிவுசெய்த பதிவேடுகள் சிதைவடைந்து அழிந்துள்ளதால் கண்டுபிடிக்க முடியாதுள்ளது. |
| (ஓ) | மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 49,827,685 தொகையான 03 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றிற்கான மீதிகளை மெய்மையாய்தல் மற்றம் சொத்துக்களை கையேற்றல் மற்றும் அகற்றல் தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | மீதிகளை உறுதிப்படுத்துவதற்குரிய தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 2012 ஆம் ஆண்டில் இதன் படி கடன்பட்டோ ரிடமிருந்து பணத்தை அறவிடுவது தொடர்பாக கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக கடுமையான நடவடிக்கைகள் எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இக்கடன் கொடுத்தோர் |

| | | |
|---|---|---|
| | | மீதி உறுதிப்படுத்தல் பதிவாளரிடமே பெற வேண்டும். அது தொடர்பாக எம்மால் மேற் கொண்ட விசாரணைகளுக்கு பதில் வழங்கப்பட வில்லை. |
| (ஔ) நிலையான சொததுக்களின் ஆரம்ப மீதி மற்றும் முன்னைய ஆண்டின் இறுதி மீதிகளுக்கு இடையே ரூபா 17,694,398 ஆன வேறுபாடு காணப்பட்டது. | ஆரம்ப மீதி சரியாக வேண்டும். | எம்மால் அது தொடர்பான காரணங்களை கண்டறிந்து 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதியை சரிசெய்து 2018 இன் ஆரம்ப மீதி சரியான பெறுமதியாக முன் கொண்டு வருவதாகும். |
| (ஃ) கடன்பட்டோர் மீதி மற்றும் அட்டவணையில் உள்ள கடன்பட்டோர் பெறுமதிக்கு இடையே ரூபா 500,800 வேறுபாடு காணப்பட்டது. | கடன்பட்டோர் பதிவேடு மற்றும் கடன்பட்டோர் மீதிகள் உறுதிப்படுத்தப் பட்டு ஒப்பிடப்பட வேண்டும். | சில கடன்பட்டோரின் மீதிகள் உறுதிப்படுத்தல் அனுப்பும் போது வறுபாடுகள் இடம்பெற்றுள்ளன. எமது பதிவேடுகளின் மீதி சரியானதாகும். |

**1.6. 3**

**கொடுக்கல் வாங்கல்களை தீர்த்து ஒடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முற்பணக் கணக்கு**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கொடுக்கல் வாங்கல்களை தீர்த்து ஒடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான 4 முற்பணக் கணக்குகளுக்குரிய 17 ஆண்டுகள் முதல் 26 ஆண்டுகள் வரையான காலவீச்சில் இருந்து வரும் அங்கீகரிக்கப்படாத திரண்ட தொழிற்பாட்டு நட்டத்தின் கூட்டுத்தொகை ரூபா 65,842 264 ஆக இருந்தது. | நிதிப் பிரமாணம் மற்றும் பாராளுமன்ற நிலையான கட்டளை 132(3 மற்றும் (4) கட்டளைகளின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். | 04 முற்பணக் கணக்குகளில் தொழிற்பாட்டு நட்டம் காணப்படுகின்றது. ஆதலால் அதனை அகற்றுவதற்காக அமைச்சரவைப் பத்திரமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதைகள் மற்றும் நடுகை பொருட்கள் முற்பணக் செயற்பாடு கலைத்தல் கணக்கிற்குரிய 28 வருடங்களுக்கு மேற்பட்டிருந்த ரூபா 1,303,832 தொகையான அறவிடப்பட வேண்டிய | நிதிப் பிரமாணம் 518 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கடன்கொடுத்தோர் தொடர்பாக உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அரசின் வருமானத்திற்க செலவு வைப்பதற்கு |

| | | |
|---|---|---|
| மீதிகளும் 28 வருடங்கள் கடந்திருந்த ரூபா 76,157 தொகையான தீர்க்கப்பட வேண்டிய மீதிகளும் காணப்பட்டன. | | தீர்மானிக்கப்படுகின்றது. கடன்பட்டோர் தொடர்பாக நிதிப் பிரமாணம் 14(4) இன் கீழ் பரிசோதனை நடாத்தப்படுகின்றன. |

**1.6.4 நிதி நிலைமைக் கூற்று**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்று மற்றும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை தொடர்பான கூற்றில் குறிப்பிடப்பட்ட பெறுமதக்கு இடையே ரூபா 8,092,884 ஆன வேறுபாடு காணப்பட்டது. | திறைசேரி அறிக்கையுடன் ஒப்பிடப்பட்டு சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | புதிய ஏற்பாடுகளின் கீழ் சொத்துக்களை கணக்கிடல் இவ்வாண்டிலிருந்து நிதிக்கூற்றுக்களில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த துடன் இத்தவறிற்காக திறைசேரியால் கணனி நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்தியதன் மூலம் இத்தவறு திருத்தம் செய்யப்பட்டுள்ளது. |

**1.6.5 காசுப்பாய்ச்சல் கூற்று**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| குணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதிச் செயற்பாடுகளின் கீழ் கூடுதலான கொடுப்பனவாக காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 620,741,594 ஆன பண்ணை முற்பணக் கணக்கில் திறைசேரியிலிருந்து கிடைத்தவை மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் கீழ் அறவீடுகளாக இருந்த போதும் அப்பெறுமதி செயற்பாட்டு நடவடிக்கைகள் முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தும் உருவான காசுப் பாய்ச்சலின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | காசு உட்பாய்ச்சல் உரிய செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட வேண்டும். | இவ்விரண்டிலும் சேகரிக்கப்பட்ட பணத்திலிருந்து கிடைத்த உண்மையான பெறுமதியை மிகைத்து கூடுதலான கொடுப்பனவு ரூபா 620,741,594 ஆக இருந்தது. அது கணக்கில் உள்ளடக்கப்பட்டது. |

### 1.6.6 நிதிச் செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு திறைசேரியிலிருந்து கட்டுநிதி கிடைப்பனவு ரூபா 5,497 மில்லியாக இருந்த போதும் நிதிச்செயலாற்றல் கூற்றில் கட்டுநிதி பெறுவனவு ரூபா 5,477.6 மில்லியனாக இருந்தமையால் ரூபா 19.4 மில்லியன் வேறுபாடொன்று காணப்பட்டது. | கட்டுநதி பெறுவனவு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | இறுதி அறிக்கைக்கு தகவல்கள் பிரதிசெய்யும் போது நிரல் மாற்றப்பட்டமையயால் இவ்வேறுபாடு இடம்பெற்றுள்ளது. |

### 1.6.7 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | **கணனி, உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு** | | |
| | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணனி, உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் பதிவேடொன்று நாளது வரையாக்கப்பட வேண்டும். | உரிய நிலைமைக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது |
| (ஆ) | **பிணைகள் பதிவேடு** | | |
| | நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் உள்ளடங்கிய பிணைகள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்க வில்லை. | பிணைகள் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். | அநேகமாக நாளதுவரையாக்கப் பட்டுள்ளது. |
| (இ) | **வாகன சம்பவக் குறிப்பு புத்தகம்** | | |
| | நிதிப்பிரமாணம் 1645(அ) இன் பிரகாரம் வாகன சம்பவக் குறிப்பு புத்தகமொன்று | ஒவ்வொரு வாகனம் தொடர்பிலும் வாகன சம்பவக்குறிப்பு புத்தகங்கள் | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| பேணப்பட்டிருக்கவில்லை. | பேணப்பட வேண்டும். | |

(ஈ) வாகன நிரட்படுத்தும் பதிவேடு

| | | |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 1647(உ) இன் பிரகாரம் வாகன நிரட்படுத்தும் பதிவேடொன்று நாளது வரையாக பேணப்பட்டிருக்கவில்லை. | வாகன நிரட்படுத்தும் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். | தற்போது கொமிஸ்ரோலர் பணிப்பாளரின் ஆலோசணையின் பிரகாரம் உரிய பட்டியல் சொத்துக்கள் முகாமைத்துவ கிளைமூலம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. |

### 1.6.8 கணக்காய்விற்காக சான்றுகளின்மை

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது

| **கணக்காய்வு விசாரணைகள் தொடர்பான விபரங்கள்** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| திணைக்களத்திற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 08 கணக்காய்வு ஜயவினாக்களுக்கு 2019 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. அத்தகைய ஜயவினாக் களுக்குரிய கணக்கிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 32.35 மில்லியனாக இருந்தது. | நிதிப்பிரமாணம் 155 இன் பிரகாரம், கணக்காய்வு ஜயவினாக்களுக்கு விரைவில் பதில் வழங்கப்பட வேண்டும். அவ்வாறு பதில் வழங்கப்படாத தாமதமான ஜயவினா எனின் அதற்காக இடைக்கால அறிக்கை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். | கருத்து தெரிவித்திருக்கவில்லை |

### 1.6.9 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| (அ) திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் | கருத்துரை அளிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம் முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்வது அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் இடம் பெற வேண்டிய போதிலும் அம் மீளாய்வு எழுத்து மூலம் செய்யப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | |
| (ஆ) | வருடாந்த மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவையான நேரத்தில் தயாரித்தல் இடம் பெறுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்திற்குரிய வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டிய போதிலும் அறிக்கையின் 3.9 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானப்பு காரணமாக அத்தேவைப்பாடு நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையானதன் பிரகாரம் குறித்த காலப்பகுதியில் சகல கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் வழங்குவதாக இடம்பெறுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராலும் உறுதிப் படுத்தப்பட வேண்டிய கணக்கீட்டு உத்தியோகத்தராலும் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் 1.6.8 பந்தியின் பிரகாரம் கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் வழங்ப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.10 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **பெறுமதி ரூபா** | **இணங்காமை** | | |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 47 ஆம் பிரிவு | - | வீடுகள் மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளை பின்பற்றாமல் தெலிஜ்ஜவல பிரதி விவசாய பணிப்பாளர் (விதை) அலுவலகத்தில் புததிாக நிர்மாணிக்கப்பட்ட விற்பனை கூடம் பிரதான மதிலுடன் தொடர்புடுத்தி நிர்மாணிக்கப்பட்டிருந்தது | கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளை பின்பற்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இங்கு வேண்டுமென்றே நிர்மாண எல்லையை கருத்திற் கொள்ளாமல் செயற்படவில்லை என பணிப்பாளரால் (விதை மற்றும் நடுகை பொருள் அபிவிருத்தி) தெரிவிக்கப் பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | | | | |
| (i) xix ஆம் அத்தியாயத்தின் 5 ஆம் உப பிரிவு | 150,996 | மொனறாகல பிரதி விவசாய பணிப்பாளர் (மாகாணங்களுக்கு இடையே) அலுவலகத்தில் சேவை புரியும் இரண்டு உத்தி யோகத்தர்களிமிருந்து வீட்டு வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | தாபன விதிக் கோவையின் பிரகாரம் உத்தி யோகத்த வீடுகளில் இருந்து வாடகை அறவிடப்பட வேண்டும் | இது தொடர்பில் செயற்பட வேண்டிய விதம் தொடர்பில் கணக்காளர் (சம்பள முகாமையாளர்I) இற்கு என்னால் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ii) xix ஆம் அத்தியாயத்தின் 6.1 உப பிரிவு | | திணைக்களத்திற்குரிய 5 நறுவனங்களில் சேவை புரியும் உத்தியோகத்தர்கள் 01 ஆண்டு முதல் 13 ஆண்டு காலமாக உத்தியோகபூர்வ விடுதிகளில் தொடர்ச்சியாக குடியிருப்பதாக அவதானிக்கப்பட்டது. | ஏதேனும் பதவியொன்றுக்கு ஒதுக்கப்பட்ட வீடொன்ற தவிர ஏனைய அனைத்து வீடுகளினதும் குத்தகைக் காலம் 05 ஆண்டுகள் எல்லையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தாபன விதிக் கோவையின் 6.12 பரிவின் பிரகாரம் குத்தகை காலம் நீடிக்கப்படுதுடன் காத்திருக்கும் பட்டிலில் உள்ள பதவிநிலைத்தர உத்தியோகத்தர்கள் கோரினால் 05 ஆண்டுகளை மிகைத்தவர்களை அகற்றி அவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் |

(இ) இலங்கை சநனநாயக சோஷலிசக் குடிரசின் நிதிப் பிரமாணக் கோவை

----------------------------

| | | | |
|---|---|---|---|
| (i) நிதிப்பிரமாணம் 103 | மதுருகெட்டிய விதை மற்றும் நடுகை பொருள் விற்பனை நிலையத்தின் விற்பனைக்கு உள்ள நாற்றுக்கள் மற்றும் விதை காணாமல் போதல் மற்றும் சேதமடைதல் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இறந்துள்ள நாற்றுக்கள் தொடர்பாக முறையாக நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) நிதிப்பிரமாணம் 104(3) | 2002 நவம்பர் நாரஹேன்பிட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு கிடைத்த முளைக்கும் சக்தி குறைந்த இருப்பு தொடர்பான விதை மற்றும் நடுகைப் பொருள் பணிப்பாளருக்கு நிதிப்பிரமாணம் 104(3) இன் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஆரம்ப அறிக்கை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | - மேற்படி - | அது தொடர்பாக எடுக்க வேண்டிய நடைமுறை தொடர்பாக பணிப்பாளர் தெரியப்படுத்தப்பட்டுள்ளார். |
| (iii) நிதிப்பிரமாணம் 143(2)(இ) | 2018 மார்ச் 02 ஆந் திகதி முதல் பண அறவிடல் இயந்திரம் செயற்படாம் இருந்தமையால் கன்னோருவ விதை மற்றம் நடுகைப் பொருட்கள் விற்பனை இல்லத்தின் நாற்றுக்கள் விற்பனையின் போது பற்றுச்சீட்டு வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பற்றுச்சீட்டு வழங்கப்பட வேண்டும். | பண அறவிடல் இயந்திரம் செயற்படாத போது பொது 172 பற்றுச்சீட்டு பயன்படுத்துமாறு பணிப்பாளர் (விதை மற்றும் நடுகை பொருள் அபிவிருத்தி) இற்கு என்னால் அறிவிக்கப் பட்டிருந்தது. |
| (iv) நிதிப்பிரமாணம் 177 மற்றும் 2010 செப்தம்பர் 23 ஆந் திகதிய 08/2010 ஆம் இலக்க விவசாய பணிப்பாளர் | 4 பிரதேச அலுவலகங்களில் 4 நாட்கள் முதல் 13 நாட்கள் வரையான காலதாமதத்தின் பின்னர் ரூபா 2,670,404 வங்கியில் இடப்பட்டிருந்தது. | விற்பனையிலிருந்து கிடைக்கம் பணம் தாமதமின்றி வங்கியில் இடப்பட வேண்டும் | தாமதமின்றி வங்கியில் இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | நாயகத்தின் சுற்றறிக்கையின் 1.7 ஆம் பந்தி | | | |
| (v) | நிதிப்பிரமாணம் 502(2) | முற்பணக் கணக்கு விடயமொன்றுக்காக நிலையான சொத்துக்கள் பதிவேடு பராமரிக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணம் நிலையான சொத்துக்கள் பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும். | சொத்துக்கள் பதிவேட்டினை வரையாக்கவும் பொது திறைசேரியுடன் இணைந்து அவர்களின் தகவல்களுடன் ஒப்பிட்டு தேசிய கணக்கினுள் அவற்றை உள்ளடக்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (vi) | நிதிப்பிரமாணம் 753(2) | திணைக்களத்தின் வெவ்வேறு பிரிவுகளினால் வழங்கப்படும் பொருட்களுக்காக பெறுகை கட்டளை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை | பொருட்கள் பெற்றுக்கொண்டதை பெறுகை கட்டளை மூலம். உறுதிப்படுத்த வேண்டும் | தற்போது சில பெறுகை கட்டளைகள் பெற்றக்கொள்ளட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமை தவிர்ப்பதற்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. |
| (vii) | நிதிப்பிரமாணம் 880 மற்றும் 881 மற்றம் விவசாய திணைக்களத்தின் 2015 திசெம்பர் 11 ஆந் திகதிய திணைக்கள கட்டளை 17/2015 | போம்புவெல நெல் ஆராய்ச்சி மற்றம் அபிவிருத்தி நிலையத்திலும் கன்னொருவ மரக்கறி விதை நிலையத்தின் உத்தியோகத்தர்களால் பிணை வைக்கப்பட்டிருக்க வில்லை. | பிணைக் கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் பிணை பெற்றக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | இது தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முகாமைத்துவ உதவியாளருக்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | ஏனைய சுற்றறிக்கை<br>----------------------------------- | | | |
| | 2010 செப்தம்பர் 23 - ஆந் திகதிய 08/2010 ஆம் இலக்க விவசாய பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கை யின் 4 ஆம் பந்தி | திணைக்களத்தின் ஆராய்ச்சி பிரிவுகளில் ஆராய்ச்சி தொடர்பாக பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | சகல தகவல்களும் உள்ளடக்கிய வகையில் ஆராய்ச்சி தகவல் பதிவேடொன்று | அநேகமாக நாளதுவரையாக்கப்பட்டுள்ளது. |

பேணப்பட
வேண்டும்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திணைக்களத்தினால் கட்டுநிதி கோரப்பட்ட போதும் திறைசேரியால் போதியளவு கட்டுநிதி வழங்கப்படாமையால் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 916.36 மில்லியனான பட்டியல்கள் கையில் காணப்பட்டன. | கட்டுநிதி நிர்ணயிக்கப்பட்ட பிரகாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவித்திருக்கவில்லை |

### 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நிதிப் பிரமாணம் 66 ஏற்பாடுகளின் பிரகாரம் 03 செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டிலருந்து 21 சதவீதம் முதல் 151 சதவீதம் வரையான வீச்சில் நிதிஏற்பாடு பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது. | சரியான செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | தொலைபேசிச் செலவினம் மூலதன செலவின விடயத்திலிருந்து செலவு செயயப்பட்டமை மற்றும் சேனா கொட்டிற்காக வேறாக நிதிஏற்பாடு வழங்கியமை காரணமாக நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டது. |
| (ஆ) கன்னோருவையில் அமைந்துள்ள கள வளங்கள் நிலைய வங்கி திருத்தத்திற்காக ரூபா 60 மில்லியனான நிதிஏற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டது. | - மேற்படி - | விவரக் குறிப்புக்களை தயாரிப்பதற்கு காலம் எடுத்தமை கேள்விதாரரால் கூடிய கூறுவிலை சமர்ப்பிக்கப்பட்டமையால் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டது. |
| (இ) 38 செலவின விடயங்கள் மற்றும் 33 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக மிகை நிதி மேற்கொள்ளப்பட்டதால் அச்செலவின விடயங்களில் நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்புக்கள் தேறிய நிதிஏற்பாட்டின் 20 சதவீதம் முதல் | - மேற்படி - | செலவின முகாமைத்துவமும் ரொலர் பெறுமதி அதிகரித்தமையால் பெறுகை நிறைவேற்ற முடியாமல் போனமை, பட்டியல் தயாரிக்கப்பட்டதன் பிரகாரம் சமர்ப்பிக்கப்படாமை ஊழியர் |

| | |
|---|---|
| 24 சதவீதம் வரையான அளவினைக் கொண்டிருந்தது. | ஆட்சேர்ப்பு மறையாக இடம்பெறாமை சேமிப்புக்கு காரணங்களாக இருந்தன. |

**2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக 2019 ஆம் ஆண்டின் போது 197 சந்தர்ப்பங்களில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 2.99 மில்லியன் செலவினம் தொடர்பில் பொறுப்புக்கள் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 150 இன் பிரகாரம் சகல பொறுப்புக்களும் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | அறிக்கையிடப்படாத பொறுப்புக்கள் 2019 ஆம் ஆண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதாக கணக்காளராக (நிதி முகாமையாளர்) இ.நி.க.சே 1 இன் மூலம் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. |

**2.4 முற்பண மீதிகள்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வைப்புச் செய்யப்பட்டு 02 ஆண்டுகளை மிகைத்திருந்த ரூபா 11,861,970 ஆன பொது வைப்புக்கள் மீதிகள் தொடர்பான நிதிப்பிரமாணம் 571(3) ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணம் 571(3) ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்புக்கள் இணங்காணப்பட்டு கணக்கீட செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சில வைப்புக்கள் அரச வருமானத்திற்கு செலவு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.3 வங்கிக் கணக்குகளின் செயற்பாடு**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வழங்கப்பட்டிருந்தும் 06 மாதங்களை விஞ்சியிருந்த வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத ரூபா 127,927 தொகையான கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத 11 காசோலைகள் நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | தீர்வுசெய்து தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. |

**2.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்க கூற்று**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 8,197,445 ஆக இருந்ததுடன் நிலுவை மீதிகள் 01 ஆண்டு முதல் 24 ஆண்டு வரை காலவீச்சொன்றில் காணப்பட்டது, | நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இக்கடன் மீதிகள் தீர்வு செய்வதற்கு எம்மால் அதிகளவு முயற்சிகள் எடுத்திருந்ததுடன் மிகவும் பழைமையான போதியளவு தகவல்களை கண்டு பிடிப்பதற்கு முடியாமையால் மேலும் நிலுவையாக காணப்பட்டது. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 திட்டமிடல்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் 14 சந்தர்ப்பங்களில் திருத்தத்திற்கு உட்பட்டிருந்ததுடன் இறுதியாக திசெம்பர் 28 ஆந் திகதி கூட திருத்தத்திற்கு உட்படுத்தப்பட்டிருந்தமை வருடாந்த | 2014 பெப்ரவரி 14 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | |
|---|---|---|
| பாதீட்டை அடிப்படையாகக் கொண்டு முறையான சாத்தியவள ஆய்வொன்றில்லாமல் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது. | பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | |

**3.2 செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) தரமான விதைகளின் முளைக்கும் திறனை மேம்படுத்தும் நோக்கில் தேசிய விதை உற்பத்தி மற்றும் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்பட்ட போதும் விதை தேவைப்பாட்டிற்கு திணைக்களத்தினால் வழங்கும் பங்களிப்பு 2 சதவீதம் முதல் 30 சதவீதத்திற்கும் இடைப்பட்ட குறைந்த அளவில் காணப்பட்டது. | நாட்டின் தேவைப்பாட்டிற்கு இணங்கும் வகையில் விதை தேவையான அளவில் உற்பத்தி செய்வதற்கு திணைக்களத்தின் வளங்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | கடந்த போகங்களில் காணப்படும் கடுமையான வரட்சி விதை உற்பத்திக்கு தாக்கமளித்துள்ளதாக தயவுடன் அறிய தருகின்றேன் |
| (ஆ) 2017 ஆம் ஆண்டில் கிராம சேவையாளர் மட்டத்தில் மண்மாதிரி பரிசோதிக்கப்பட்டு பிரதேச ரீதியாக பொருத்தமான 2 பரிந்துரை வழங்கும் செயற்திட்டமொன்றை பூங்கா பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் ஊடாக செயற்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஹொரணை பழ ஆராய்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்திற்கு கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய இரு இரண்டு மாவட்டங்களின் மண் மாதிரி பரிசோதனை பொறுப்பு கையளிக்கப்பட்டிருந்தது. போதிலும் 2018 ஒக்தோபர் வரையிலும் பொருத்தமான உரம் பரிந்துரைக்கப்பட்டிருக்க வில்லை. | தேசிய தேவைப்பாடாக இனங் காணப்பட்டுள்ள இந்நிகழ்ச்சித் திட்டங்களை செயற் படுத்துவதற்கு திணைக்களத்தின் வளங்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | வழங்கப்பட்டுள்ள மண் மாதிரிகள் போதியளவில் இல்லையென்பதால் பசளை பரிந்துரை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. |
| (இ) வெப்ப மரக்கறி மற்றும் பழங்கள் என்பவற்றை ஆரம்பமாக கொண்ட ஆராய்சிச்களை மேற்கொள்ளல் சீதா எலிய விவசாய ஆராய்ச்சி நிலையத்தின் நோக்கமாக இருந்த பொது நிறுவனத்தின் பயிர் வகைகளை அறிமுகப்படுத்துதல் | இறக்குமதி விதை தொடர்பாக ஆராய்ச்சிகள் மேற்கொள்ளபட்டு புதிய இனங்கள் அறிமுகப்படுத்த நடவடிக்கை | இவ்வாண்டில் கோவா மற்றும் கரட் என்பவற்றில் புதிய இனங்களை அபிவிருத்தி செய்யப்பட்டு அவை கலப்பு விதை உற்பத்தியாக ஆராய்ச்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக |

| | | |
|---|---|---|
| தொடர்பாக ஆராய்ச்சி மேற்கொள்ள கவனம் செலுத்தியிருக்கவில்லை | எடுக்கப்பட வேண்டும். | பணிப்பாளர் (பூங்கா பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி) ரால் தெரிவிக்கப்பட்டிருந்தது. |

## 3.3 பிரதான பணிக்கு முரணான செயற்பாடுகள்

---------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஹொரண பழவகை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் கீழ் ''மீல்லேவ சூவதெல்'' பெயரில் வாழையின் அறுவடை பெறும் காலத்தைத் தீர்மானித்தல் மற்றும் உற்பத்தியை விஞ்ஞான ரீதியில் கையாள்வதன் மூலம் காயினை பருமனாக்குவதற்கான தாக்கமளிக்கும் கற்கை செயற்திட்டத்திற்காக ரூபா 2,310,052 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், இந்த ஆராய்ச்சி சமூகத்தில் காணப்படுகின்ற இரண்டாவது விவசாயிகள் பிரச்சினையாக இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பிரதேச விவசாயிகளின் பிரச்சினைகளை இனங்கண்டு ஆராய்ச்சித் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் உத்தியோகத்தர்கள் அதற்காக அனுப்பப்பட வேண்டும். | இந்த ஆராய்ச்சிகளை செய்வதற்கு முன் இலங்கை விவசாயக் கொள்கை சபையின் அங்கத்தவர்கள் முன்னிலையில் எதிர்காலத்தில் சமர்ப்பித்து அங்கீகாரம் பெறுவதுடன் 06 மாதங்களுக்கு ஒரு தடவை இந்த அங்கத்தவர்கள் முன்னிலையில் இந்த ஆராய்ச்சியின் முன்னேற்றம் சமர்ப்பிக்கப்பட்டு அது தொடர்பாக கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்படும். என பணிப்பாளர் (பழவகை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி) இனால் எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | இலங்கையில் உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் உணவு பயிர் உற்பத்திகளை காலநிலைக்கு இணைந்ததாக பசளை தொழில்நுட்பத்தை கட்டியெழுப்பும் விசேட செயற்திட்டமொன்று ஆரம்ப செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு ஹொரண பழவகை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்திற்கு ரூபா 25 மில்லியன் | செயற்திட்டத்தின் எதிர்பார்த்த நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் திட்டம் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட வேண்டும். | நீர் வழங்கல் முறைமையொன்று முன்னுரிமைத் தேவையாக இருந்தமையால் நிறுவனத்திற்குக் கிடைக்கின்ற பொதுவான நிதிஏற்பாடுகள் அதற்காக போதியளவில் இல்லாமையினால் இந்த விசேட செயற்திட்டம் மூலம் அதனை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | தொகையான நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், பொதுவான பணிகளுக்காக அந்த நிதிஏற்பாடு செலவிடப்பட்டிருந்தது. | | |
| (இ) | 2018 ஆண்டிற்காக பூங்கா பயிர்ச்செய்கை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூபா 30 மில்லியன் தொகையான மொத்த நிதிஏற்பாட்டில் 70 சதவீதம் 07 இடங்களில் ஆய்வுகூட வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் செயற்திட்டத்தின் பிரதான நோக்கமான காலநிலை மாற்றங்களைக் கவனத்தில் கொள்ளாமல் ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக வழங்கல் ஒன்றை ஏற்படுத்துவதற்காக மரக்கறி உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. | செயற்திட்டத்தின் எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்குத் தேவையான செயற்பாடுகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட வேண்டும். | பணிப்பாளர் (பூங்கா பயிர்ச்செய்கை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி) இடமிருந்து விடயம் விசாரிக்கப்பட்டுள்ளது. பதில் கிடைத்ததன் பின்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுமென அறியத் தருகின்றோம். |

## 3.4 எதிர்பார்த்த பூர்த்தி மட்டம் அடையப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | இனப்பெருக்க நாற்று உற்பத்தி மற்றும் கொள்வனவு செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டின் அங்கீகரிக்கப்பட்ட மரக்கறி நாற்றுக்களின் அளவு கிலோகிராம் 20,000 ஆக இருந்த போதிலும், ஆண்டின் இறுதியில் 67 சதவீதம் அதாவது கிலோகிராம் 13,418 அளவு மாத்திரமே அடையப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | எதிர்பார்த்த இலக்கை அடைந்து கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | சில பயிர்ச் செய்கைகளில் மிகை இருப்பு காணப்பட்ட மையினால் கொள்வனவு குறைக்கப்பட்டதுடன் சீரற்ற காலநிலை யினால் கொள்வனவு செய்வதற்கு முடியுமாக இருந்த நாற்றுக்களின் அளவு எதிர்பார்த்த அளவை விடக் குறைவாக இருந்தது. |
| (ஆ) | மிளகாய் பயிர்ச்செய்கையில் இனப்பெருக்க நாற்றுக்களின் போது இறக்குமதி மூலம் அல்லது | நாட்டின் தேவைக்கு ஈடுகொடுக்கும் | இனப்பெருக்க மிளகாய் நாற்றின் தேவையில் 25 சதவீதத்தை |

| | | | |
|---|---|---|---|
| | உள்நாட்டு வழங்கல்கள் மூலம் மொத்தத் தேவையும் வழங்கப்படாமையினால் தேவையான ஏனைய விதை அளவு விவசாயிகளால் சுயமாக பூர்த்தி செய்யப்படுவதுடன் இந்த நாற்று தரமான நாற்றாக இல்லாதிருந்ததற்கான சந்தர்ப்பம் அதிகமாக இருந்தமையால் அதிலிருந்து விவசாயிகளுக்கு சிறந்த விளைச்சலை பெற்றுக் கொள்வதற்கு காணப்பட்ட சந்தர்ப்பம் கைநழுவியிருந்தது. | வகையில் நாற்றுக்களின் தேவை அளவை உற்பத்தி செய்வதற்கு திணைக்களத்தின் வளங்களைப் பயன்படுத்துதல் வேண்டும். | வழங்கும் நோக்கை அடிப்படையாகக் கொண்டு தற்போது மிளகாய் கி.கிராம் 800 காணப்படுவதுடன் எதிர்காலத்தில் அவற்றை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | உள்நாட்டு விதை உருளைக் கிழங்கு உற்பத்தியை அதிகரிப்பதற்கு காணப்படுகின்ற தடைகளை இனங்கண்டு மாற்றுவழிச் சந்தர்ப்பம் மூலம் விதை உருளைக்கிழங்கு உற்பத்தியை அதிகரிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | ஆராய்ச்சியை மேற்கொண்டு உற்பத்தியை அதிகரிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். | சரியான திட்ட முறைமையை பின்பற்றி தேவையான பிரகாரம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | இலங்கையில் பரவலாக உள்ள மூன்று தோடை இனங்களில் கடந்த 05 வருட காலத்தின் போது பிரதேசங்களுக்கு விடுவிக்கப்பட்ட சான்றுகளின் அளவு மிகவும் குறைவான பெறுமதியைக் கொண்டிருந்ததுடன் அதன் பிரகாரம் பரவலாக்கும் பிரிவில் நிறைவேற்ற வேண்டிய இருந்த பணிப்பொறுப்புக்கள் போதிய அளவில் ஹொரண ஏஹீம் 1, 2, 3 என்ற ஜமுநாரங் இனம் தொடர்பான ஆராய்ச்சியில் 2006 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2013 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்ட போதிலும், அந்த ஆராய்ச்சியின் விளைவுகள் பிரதேசங்களுக்கு பாய்ந்து செல்லாமையினால் அதற்காக செலவிடப்பட்ட செலவினம் பயனற்றதாக இருந்தது. | ஆராய்ச்சிகளின் விளைவுகள் பிரதேசங்களுக்கு செல்லாமைக்கான காரணங்களைக் கண்டறிந்து அற்ற ஆராய்ச்சி அபிவிருத்தியைச் செய்து பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பணிப்பாளர் (விதை மற்றும் நாற்றுப் பொருள் அபிவிருத்தி) அவரிடம் பதில் கோரப்பட்டு இருந்தும் இதுவரையிலும் பதிலொன்று கிடைத்திருக்கவில்லை. |
| (உ) | ஹொரண பழவகை ஆராய்ச்சி நிறுவனத்தால் ''ஹொரண பப்பாயா'' என்ற பெயரில் புதிய உள்நாட்டு கண்டுபிடிப்பு இனம் ஒன்று தொடர்பான ஆராய்ச்சி நடவடிக்கைகள் 2002 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2014 | - மேற்படி - | இறக்குமதி செய்யப்பட்ட சிற்றின நாற்றுடன் உள்ள போட்டித் தன்மையின் காரணமாக இந்த இனத்தின் பரவலாக்கம் மெதுவாக மேற்கொள்ளப் |

| | | | |
|---|---|---|---|
| | ஆம் ஆண்டின் போது விடுவிக்கப்பட்டிருந்தது. ஆராய்ச்சி விளைவுகளை பிரதேசங்களுக்கு பரவலாக்குவதற்கு திணைக்களத்தால் போதியளவான நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருந்தமையால் 04 வருடங்களில் இந்த இனநாற்று உற்பத்தியின் பங்களிப்பு கிலோகிராம் 3.38 மாத்திரமாகும். | | பட்டிருந்தது. |
| (ஊ) | வீரவில விவசாய ஆராய்ச்சி நிலையம் மூலம் கடந்த 10 வருடங்களில் விதை இனங்கள் விடுவிக்கப்படாதிருந்ததுடன் மேற்கொள்ளப்பட்ட அனேகமான ஆராய்ச்சிகள் பரீட்சித்து பார்த்தல் மற்றும் மதிப்பிடுதல் போன்ற துறைகளுக்கு அனுப்பப்பட்டிருந்தது. | பிரதேச விவசாயத்தின் பிரச்சனைகளை இனங்கண்டு அதற்காக துரிதமானதும் நிரந்தரமானதும் தீர்வுகள் வழங்கக் கூடிய வகையில் ஆராய்ச்சித் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு உத்தியோகத்தர் அதற்காக ஈடுபடுத்தப்பட வேண்டும். | விவசாயிகளின் காலரீதியான பிரச்சினைகளை இனம்காண்பதற்காக அண்மைக்காலங்களில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட ஆராய்ச்சி மற்றும் பரவலாக்கும் பிரிவிற்கிடையே கலந்துரையாடல் மூலம் ஆராய்ச்சிப் பிரிவினதும் விவசாய பரவலாக்கல் பிரிவு என்பவற்றுடனும் கலந்துரையாடி நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. |
| (எ) | அரசாங்க உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற அமைப்புக்களின் உத்தியோகத்தர்கள், விவசாயிகள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்காக புதிய திட்டங்களை உருவாக்குதல் பிபில பூங்கா நிறுவனத்தின் அடிப்படை நோக்கமாக இருந்த போதிலும், உரிய பயிற்சி அளித்தல்களின் செயல்முன்னேற்றம் கடந்த 05 ஆண்டுகளில் 41 சதவீதத்திற்கும் 69 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் காணப்பட்டது. | உத்தியோகத்தர் களினதும் அறிவு மற்றும் திறன்களை மேம்படுத்துவதற்கு தேவையான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை குறித்துரைத்த பிரகாரம் நடாத்தப்பட வேண்டும். | பூங்கா பயிர்ச்செய்கை பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் மூலம் அரசாங்க உத்தியோகத்தர்கள் அரசசார்பற்ற அமைப்புக்களின் உத்தியோகத்தர்கள., விவசாயிகள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குதல் அடிப்படை நோக்கமாகும். |
| (ஏ) | பழவகை கிராம நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட கிராமங்களில் இருந்து பெறப்பட்ட வெற்றிகரமாக கன்றுகளின் அளவு 06 சதவீதத்திற்கும் 49 சதவீதத்திற்கும் இடையிலான | எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நிறுவனத்தின் பௌதீக மற்றும் மனிதவளங்களை | வெற்றிகரமான கன்றுகளின் அளவின் செயல்முன்னேற்றம் 06 சதவீதத்திற்கும் 49 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் காணப்பட்ட போதிலும், |

| | | |
|---|---|---|
| வீச்சில் காணப்பட்டமையால் எதிர்பார்த்த நோக்கங்கள் அடையப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஆக்கபூர்வமாக ஈடுபடுத்துதல் வேண்டும். | சமூகப் பொருளாதார மற்றும் திட்டமிடல் நிலையத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பின்தொடர் அறிக்கையின் செயல்முன்னேற்றம் அதனை விட உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருந்தமையை தயவுடன் அறியத் தருகின்றேன். |

**3.5 எதிர்பார்த்த நலன்கள் (Out come) பெறப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2002 ஆம் ஆண்டில் பல்வேறு வாழை இனங்களில் ஆராய்ச்சி துறையில் 07 வருடங்கள் அளவில் மதிப்பீட்டிற்கு உட்படுத்தி 2010 ஆம் ஆண்டில் மில்லேவ சூவற்தெல என்ற பெயரில் இனமொன்று விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், 2010 ஆம் ஆண்டு முதல் 2018 ஒக்தோபர் வரை இந்த இனத்தில் பிரதேசங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட கன்றுகளின் எண்ணிக்கை 763 மாத்திரமாகும். | ஆராய்ச்சிகளின் விளைவுகளை பிரதேசங்களுக்கு அனுப்பாமைக்கான காரணங்களைக் கண்டறிந்து அந்த ஆராய்ச்சிகளில் விருத்தி செய்து நடாத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பாதுகாக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ள மில்லேவ சுவர்ந்தெல் தாய் மரத்திலிருந்து அவ்வவ்போது 2018 நவம்பர் 16 ஆந் திகதி வரை 600 கன்றுகள் அளவில் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) ஹொரணை பழவகை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் கீழ் ‘‘இங்து’’ ஜமநாறங் இன ஆராய்ச்சி நடவடிக்கைகள் 2002 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2009 ஆம் ஆண்டில் விடுவிக்கப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் முறையே 79 சதவீதம், 22 சதவீதம் மற்றும் 04 சதவீதம் வரை உற்பத்தி குறைவடையும் | - மேற்படி - | பணிப்பாளர் (விதை மற்றும் பொருள் அபிவிருத்தி) இடமிருந்து பதில் கோரப்பட்டிருந்தும் இதுவரையிலும் பதில் கிடைக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | நிலைமையைக் காண்பித்ததுடன் அதற்கான காரணமத் கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப் படவில்லை. | | |
| (இ) | ஹொரணை பழவகை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் கீழ் ‘‘ஹெரண ஜூஸி’’ ஐமநாறங் இனம் 2004 ஆம் ஆண்டில் ஆராய்ச்சி ஆரம்பிக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டில் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் விதை மற்றும் பயிர்ச்செய்கைப் பொருட்கள் நிலையத்தில் 150 கன்றுகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், பிரதேசங்களுக்கு கன்றுகள் பகிர்ந்தளிக்கப்படவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | 1979 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பிபில தோடை ஆராய்ச்சி நிறுவனம் 1989 ஆம் ஆண்டின் பின்னர் ஆராய்ச்சி உத்தியோகத்தர் இன்றி ஆராய்ச்சி உத்தியோகத்தர் ஒருவரின் கீழ் காணப்பட்டதுடன் தேசிய தேவையினை நிறைவேற்றும் வகையில் நிறுவனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஆராய்ச்சி நிலையம் விவசாய பிரச்சினைகளுக்கு பதிலளிக்கும் வகையில் செயற்பட வேண்டும். | ஆராய்ச்சி உத்தியோகத்தர்களை சேர்த்தவுடன் இந்த நிலையத்திற்கு ஆராய்ச்சி உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (உ) | பூங்கா பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் விவசாய அமைச்சுடன் தொடர்பான வீ F8 செயற்திட்டத்தின் மூலம் ரூபா 93.9 மில்லியன் செலவில் 21 பங்கசு ஆராய்ச்சி ஆய்வு கூடங்களை ஸ்தாபித்திருந்தது. அதில் மொனறாகல உள்ளக மாகாண அலுவலகத்திற்காக ரூபா 4.47 மில்லியன் தொகையான பொருட்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2018 செப்தெம்பர் 07 ஆந் திகதி வரையிலும் மண் | செயற் திட்டத்திலிருந்து எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றக் கூடிய வகையில் வளங்களை பயன்படுத்துதல் வேண்டும். | 2018 ஆகஸ்ட் 23 ஆந் திகதி வரையில் 15 மாதிரிகளின் பரிசோதனை பூர்த்தி செய்து விளைவுகள் பெறப்பட்டு முடிவடைந்திருந்தது. 2018 ஒக்தோபர் 11 ஆந் திகதி உத்தியோகபூர்வமாக பங்கசு ஆராய்ச்சி கூடம் திறக்கப்பட்டிருந்ததுடன் பணிப்பாளர் (பரவலாக்கல் மற்றும் பயிற்சி) இனால் எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | பரிசோதனை மேற்கொண்டு விவசாயிகளுக்கு அல்லது விவசாயிகளுக்கு அல்லது விவசாய அலுவலகங்களுக்கு தொழில்நுட்ப ஆலோசனைகளோ அல்லது பரிந்துரைகளோ வழங்கப்பட்டிருக்க வில்லை | | |
| (ஊ) | சீத்தாஎலிய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் ஆராய்ச்சி உத்தியோகத்தர்களால் கடந்த 04 தசாப்தம் அளவிலான காலத்தின் போது ஆராய்ச்சி மேற்கொண்டு 06 விதை உருளைக்கிழங்கு இனங்கள் விநியோகிக்கப்பட்ட போதிலும், இந்த இனங்கள் பாவனையாளர்கள் விநியோகிக்கப்பட்ட போதிலும், இந்த இனங்கள் பாவனையாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கு வென்றிருக்கவில்லை. | ஆராய்ச்சிகளின் விளைவுகள் பிரதேசங்களுக்குச் செல்லாமைக்கான காரணங்களைக் கண்டறிந்து அந்த ஆராய்ச்சிகளை அபிவிருத்தி செய்து பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆண்டின் போது 10 வெளிநாட்டு உருளைக்கிழங்கு இனங்கள் அளவில் பரீட்சிக்கப்பட்டிருந்த போதிலும், இன்னும் கிறேனோலா உருளைக்கிழங்கு இனத்தை பயிர் செய்கின்றனர். இந்த விடயங்களைக் கவனத்தில் கொண்டு கெமா கதிர்வீச்சைப் பயன்படுத்தி விசேட உருளைக்கிழங்கு மீன் உற்பத்தி நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டது. |
| (எ) | கண்ணொருவ பூங்காப் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தால் பயிர்ச்செய்கை ஊடகமாக தென்னை மட்டைக்குப் பதிலாக பைனல் இலை பயன்படுத்தும் பயிர்ச்செய்கை தொழில்நுட்பம் 2010 ஆம் ஆண்டின் போது புதிய தொழில்நுட்ப வெளிப்படுத்தும் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட போதும் 2018 திசெம்பர் வரையிலும் பயிர்ச்செய்கை தொழில்நுட்பம் விடுவிக்கப்படவில்லை. இதன் காரணமாக பைனஸ் இலையைப் பயன்படுத்துதல் தொடர்பான தொழில்நுட்பம், விவசாய கைத்தொழில்களுக்கு அறிமுகப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | புதிய தொழில்நுட்ப விளைவுகளை ஆக்கபூர்வமான பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சமர்ப்பிக்கப்பட்ட அவ்வாறான புதிய தொழில்நுட்பமொன்று விடுவிப்பதற்கு உரிய குழுவின் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. |
| (ஏ) | ஹொரண பழவகை பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் மூலம் ரூபா 01 மில்லியன் | பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு தேவையான ஆராய்ச்சிகளை | பட்டக்க ரோயித்த வாழையில் இலைக்காக வழங்கப்படுகின்ற கேமா கிரனவல திட்டங்களை |

| | | | |
|---|---|---|---|
| | நிதியேற்பாட்டின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற பெனமா நோய்க்கு உட்படுதல் அதிகரித்தல் செயற்திட்டத்தின் மூலம் வாழைப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுகின்ற விவசாயிகள் முகங்கொடுக்கும் ஆரம்ப பிரச்சினைக்கு தீர்வு வழங்குவதற்கு ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் கவனம் செலுத்தி இருக்கவில்லை. | மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மாற்றி உரிய ஆராய்ச்சிகளை எதிர்காலத்தில் செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஐ) | கண்ணொறுவ மரக்கறி விதை நிலையத்தில் விதை இருப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஒப்பாக விநியோகித்தல் மிகவும் குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்ததுடன் 04 வருடங்கள் அளவில் கடந்திருந்தமையால் பயிர் முளைக்கும் ஆபத்துக்கள் பல்வேறு வகையான விதைகள் கி.கிராம் 2,080 இருப்பொன்று 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் எஞ்சிக் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | தேவையினை இனங்கண்டு அதன் பிரகாரம் விதைகளின் உற்பத்தி மற்றும் கொள்வனவுகள் இடம்பெற வேண்டும். | பணிப்பாளர் (விதை மற்றும் பயிர்ச்செய்கை பொருட்கள்) இற்கு பதில் கோரப்பட்டுள்ளது. |
| (ஒ) | குண்டகசாலையில் அரசாங்கத்தின் விதை பண்ணையில் பீ வெங்காயம் உற்பத்தி செய்யும் நோக்கல் விவசாய அமைச்சின் நிதிஏற்பாட்டின் கீழ் ரூபா 6.55 மில்லியன் செலவில் 2014 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட 05 மழை மேவுகைகள் 2016/2017 பெரும்போகத்தின் பின்னர் அந்த நோக்கத்திற்காக பயன்படுத்தபடவில்லை. | எதிர்பார்த்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு வளங்களை ஆக்கபூர்வமாகவும் செயற்திறனாகவும் ஈடுபடுத்த வேண்டும். | பணிப்பாளர் (விதை மற்றும் பயிர்ச்செய்கைப் பொருள் அபிவிருத்தி) இடம் பதில் கோரப்பட்டிருந்தும் இதுவரையிலும் பதில் கிடைத்திருக்கவில்லை. |

## 3.6 செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாது கைவிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மரக்கறி கிருமிநாசிகளின் கட்டுப்பாட்டிற்காக உயிரியல் விங்ஞானீதியான கிருமிநாசினி | செயற்திட்டம் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற நோக்கங்கள் மற்றும் | பணிப்பாளர் விதைகளை உறுதிப்படுத்துதல் |

| | | | |
|---|---|---|---|
| | கட்டுப்பாட்டாளர்களாக ஈடுபடுத்தும் செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டில் ரூபா 17 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் நிர்வாக மற்றும் பிரதேசத்தின் ஆராய்ச்சி செலவினமாக ரூபா 1,145,000 தொகை அதாவது மொத்த நிதிஏற்பாட்டில் 6.74 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டு செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. | இலக்குகளை நிறைவேற்றுவதற்காக ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டை செயற்திறனையும் வினைத்திறனையும் பயன்படுத்த வேண்டும். | பாதுகாப்பு தொடர்பாக பதில் கோரப்பட்டிருந்தும் இதுவரையிலும் பதில் கிடைத்திருக்கவில்லை. |
| (ஆ) | விலை கூடியதாக மரக்கறிகளை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளுக்கு வழங்கும் அடிப்படையான நோக்கத்துடன் தேசிய உணவு உற்பத்திச் சங்கம் (2017-2020) நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிஏற்பாட்டின் கீழ் சுயமாக செயற்படும் பாதுகாப்பு கொட்டைகள் 40 இனை நிர்மாணித்தல் மற்றும் வழங்கிப் பொருத்தும் செயற்திட்டமொன்று நிதிப்பிரமாணம் 03(2) இன் ஏற்பாடுகள் பின்பற்றப்படாமல் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் 2018 திசெம்பர் அளவில் செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற நோக்கங்கள் மற்றும் இலக்குகளை நிறைவேற்றுவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த தொழில்நுட்பம் ஒப்பந்தக்காரராலேயே கைவிடப்பட்டிருந்தது. அதற்கு பிரதான காரணமாக அரசாங்கத்திற்கும், வழங்குனருக்கும் எதிர்வு கூற முடியாத அளவிற்கு எதிர்பாராத வகையில் மொலரிக் பெறுமதி உயர்வடைந்ததாகும். |
| (இ) | பொறியியல் பிரிவின் மூலம் 2018 ஆம் ஆண்டில் செயற்பாட்டிற்கு கொண்டுவரப்பட்ட மற்றும் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட பெறுமதி ரூபா 15.48 மில்லியன் தொகையான 11 நிர்மாண ஒப்பந்தங்கள் பூர்த்தி செய்யப்படாமல் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. | திட்டமிடப்பட்ட பிரகாரம் நிர்மாணங்கள் குறித்த காலத்தில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

### 3.7 செயற்திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மொனறாகலை பிரதி விவசாய பணிப்பாளர் அலுவலகத்தின் மூலம் மீளாய்வாண்டின் போது 20 ஹெக்டேயார் பயிர்ச்செய்கை நிலத்திற்காக மாங்கன்றுகளை வழங்குவதற்கும் 04 ஹெக்டேருக்காக இனிப்பு தோடங்கன்றுகளை வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2018 செப்தெம்பர் 07 ஆந் திகதி வரையிலும் அந்தப் பயிர்கள் பிரதேசத்தில் நடப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் நிறுவனத்தின் உத்தியோகத்தர்களை செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் ஈடுபடுத்துதல் வேண்டும். | விவசாயிகளைத் தெரிவு செய்வதற்காக நியாயமான காலமொன்று உத்தியோகத்தர்களுக்கு வழங்க வேண்டியிருந்த போதிலும், அதுவரையிலும் பிரதேசத்தின் காலநிலையில் பயிர்ச்செய்கைக்குப் பொருத்தமற்றதாக இருந்தமையால் நில காலம் இதற்காக எடுக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) ரூபா 60.47 மில்லியன் பெறுமதியான 40 ஒப்பந்தங்களின் நிர்மாண செயற்பாடுகள் குறித்த திகதியில் அல்லது அதற்கு முன் பூர்த்தி செய்யப்படாமை மற்றும் ரூபா 32.41 மில்லியன் தொகையான ஒப்பந்தப் பெறுமதிக்குரிய 18 நிர்மாண ஒப்பந்தங்களின் செயற்பாடுகள் பூர்த்தி செய்ய வேண்டிய திகதி குறிப்பாகக் காண்பிக்கப்படாமையின் அடிப்படையில் அந்த செயற்திட்டம் மூலம் எதிர்பார்த்த விளைவுகள் அடையப்படவில்லை. | திட்டமிடப்பட்ட பிரகாரம் நிர்மாணங்கள் குறித்த காலத்தில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது தொடர்பாக எனது இலகக பிரதான பொறியியலாளர் மற்றும் உதவி பணிப்பாளர் முன்னேற்ற செயற்பாடுகள் இடமிருந்து பதில் கோரப்பட்டிருந்தும் இதுவரையிலும் பதில் கிடைத்திருக்கவில்லை. |

### 3.8 காலதாமதத்தின் பின்னர் வேலை ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டில் பொறியில் பிரிவின் மூலம் செயற்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்ட பெறுமதி ரூபா 159.74 தொகையான 83 ஒப்பந்தங்களின் நிர்மாண வேலைகள் காலதாமதத்தின் பின்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அதற்கு மேலதிகமாக 24 நிர்மாண ஒப்பந்தங்களின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி குறிப்பாகக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் குறித்த திகதியில் வேலை ஆரம்பிக்கப்படாதிருந்த 22 ஒப்பந்தங்களின் திகதி நீடிப்புக்களையும் உள்ளடக்கி உடன்படிக்கையின் பிரகாரம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | திட்டமிடப்பட்ட பிரகாரம் நிர்மாணங்கள் குறித்த காலத்தில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை. |

### 3.9 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2002 செப்தம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச்சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தால் நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை. |

### 3.10 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்திற்குரிய 03 சிற்றுண்டிச்சாலைகளை வாடகைக்கு வழங்கும் போது அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளைப் பின்பற்றாமல் நலன்புரிச் சங்கத்திற்கு | அரசாங்கத்தின் ஆதனங்களை வாடகைக்கு வழங்கும் போது அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க | இது தொடர்பாக செயற்பட வேண்டிய முறை உங்களுக்கும் பிரதியுடன் சகல பணிப்பாளர் களுக்கும் |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருந்ததுடன் சிற்றுண்டிச் சாலைகளிலிருந்து கிடைத்த வருமானம் சங்கத்தின் நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | வேண்டும். | அறிவிக்கப் பட்டுள்ளது. |
| (ஆ) | சீத்தாஎலிய விதை உருளைக்கிழங்கு பண்ணையில் பொலித்தின் கலவையில் தரையில் சீமெந்து இடுவதற்காக ரூபா 3,630,000 பெறுமதியான ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | பொறுப்புடன் உரிய அடைவுடன் கூடிய பதிலளிக்குமாறு என்னால் பிரதான பொறியியலாளருக் கு அறிவிக்கப் பட்டுள்ளது. |
| (i) | அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் மதிப்பீட்டிற்கும் கேள்விக் பெறுமதிக்கும் இடையே 23.12 சதவீதம் அதாவது ரூபா 1,091,738 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்ட போதிலும், அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 7.9.2 வழிகாட்டியின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் விரிவான கேள்வி மதிப்பீடு செய்யப்படவில்லை. | பிரதேசங்களுக்குரிய வேலைத் தளங்களைப் பரிசோதனை செய்து சரியான மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. |
| (ii) | மதிப்பீட்டின் விடய இலக்கம் 02 இன் கீழ் 40 மில்லிமீற்றர் தடிப்பத்தில் 6,000 சதுர மீற்றர் கொங்கிறீட் இடுவதில் மேற்கொள்ளப்பட்ட வேண்டியிருந்த போதிலும், பௌதீக பரிசோதனையின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட மாதிரிகளுக்கு இணங்காத வகையில் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்ததுடன் பொறியியல் உதவியாளரினால் வேலைத்தளம் பரீட்சிக்கப்பட்டு விடயப்பரப்பு மாற்றப்பட்டிருந்த போதிலும், அதற்காக முறையான மற்றும் எழுத்து மூல அங்கீகாரம் பெறப்படவில்லை. | மாதிரிகளுக்கு இணங்க உரிய பணிகள் நிறைவேற்றப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. |
| (iii) | பொலித்தீன் உறைகள் சிலவற்றில் சீமெந்துக் கலவை காணப்பட வேண்டிய தடிப்பு 05 மீல்லிமீற்றர்களுக்குக் குறைவாக இடப்பட்ட 4,000 மீற்றர் நிறைவேற்றப்படாத வேலைக்காக | கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் உரிய பணிகளை சரியான பிரகாரம் நிறைவேற்றுவதை உறுதிப்படுத்துதல் | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 265,000 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. | மற்றும் மேலதிகமாக வழங்கப்பட்ட கொடுப்பனவுகளை அறவிடல் வேண்டும். | |
| (iv) | தாங்கும் முட்டு சரிவான இடைவெளியில் இடப்படாமையின் காரணமாக நிர்மாணம் மேற்கொண்டு ஒரு மாதத்திற்குள் சீமெந்து தட்டுக்கள் வெடித்திருந்தது. | அளவிடைப் பத்திரம் (BOQ) சரியாக தயாரிக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. |
| (இ) | 05 நிர்மாண ஒப்பந்தங்களுக்குரிய ரூபா 4,686,467 கூட்டுத்தொகையான அதாவது 61 வீதமான வேலைகள் பூர்த்தி செய்யப்படாமல் விலகியிருந்த ஒப்பந்தக்காரர் கறுப்புப் பட்டியலில் இடமளிக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் கேள்வி மதிப்பீடு மேற்கொண்டு மிகவும் பொருத்தமான ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. |
| (ஈ) | 05 நிர்மாண ஒப்பந்த வேலை விடயங்களுக்குரியதாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் பிரகாரம் ஒப்பந்தகாரரிடமிருந்து அதிக கட்டணம் மற்றும் தாமதக் கட்டணமாக ரூபா 576,634 தொகை அரசாங்கத்திற்கு அறவிட வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | அரசாங்கத்திற்கு அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. |
| (உ) | சீத்தாஎலிய பண்ணையில் புதிய களஞ்சிய தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 6.27 மில்லியன் தொகையான ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன. | | |
| (i) | அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.5.1 வழிகாட்டலிற்கு முரணாக ரூபா 4.6 மில்லியன் தொகையான நிதிஏற்பாட்டை விஞ்சி ரூபா 1.67 மில்லியன் தொகை மேலதிகமாக பொறியியல் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. | அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018 மார்ச் 28 ஆந் திகதிய பணிப்பாளர் (விதை மற்றும் பயிர்ச் செய்கைப் பொருள் அபிவிருத்தி) இடமும் பிரதான பொறியியலாள ரிடமிமும் பதிவு |

| | | | |
|---|---|---|---|
| | | | கோரப்பட்டுள்ளது. |
| (ii) | பொறியியலாளர் மதிப்பீட்டை விட கேள்விப் பெறுமதி 24.74 சதவீதம் மற்றும் 32 வேலை விடயங்களுக்குரிய விலை வீதம் 23 சதவீதம் முதல் 56 சதவீதம் வரை உயர்ந்த வீச்சில் காணப்பட்டதுடன் அதன் போது அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 7.9.2 வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் ஒப்பந்தக் காரர்களைத் தெரிவு செய்யும் போது அனுபவம் இயலுமை மற்றும் இயலளவு தொடர்பாக கவனத்தில் கொண்டு ஒப்பந்தம் கையளிக்கப்பட வேண்டும். | - மேற்படி - |
| (iii) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 7:10 இன் பிரகாரம் ஒப்பந்தக்காரருக்கு ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்குள்ள இயலுமை மற்றும் இயலளவு காணப்படுகின்றமை பெறுகை நிறுவனத்தால் தீர்மானிக்கப்பட வேண்டிய போதிலும், கேள்வி மதிப்பீட்டின் போது ஆகக் குறைந்த விலை தொடர்பாக கூடிய கவனம் செலுத்தி கேள்விதாரர் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். அதன் காரணமாக கேள்விதாரர் இந்த ஒப்பந்த செயற்பாடுகளில் ஒரு பகுதியை மாத்திரம் நிறைவேற்றிய பின் கைவிட்டிருந்தார். | - மேற்படி - | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. |
| (iv) | அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் மதிப்பீட்டின் பிரகாரம் 225 மில்லி மீற்றர் தடிப்பமுடைய செங்கற்கள் கட்டிடத்திற்காக ரூபா 900,819 தொகை செலுத்தப்பட்ட போதிலும், அதற்காக செங்கற்கள் பயன்படுத்தப்படவில்லை. | அளவிடை பத்திரத்தின் பிரகாரம் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. |
| (v) | குறித்த தடிப்பமும் நியமமும் இன்றி தரை கொங்கிறீட் இடப்பட்டிருக்கும் போது ரூபா 121,918 தொகையான முழுப் பணமும் செலுத்தப்பட்டிருந்தது. | செலுத்துவதற்கு முன்னர் உரிய பணிகள் சரியாக பிரகாரம் நிறைவேற்றப் பட்டமை தொழில்நுட்ப உத்தியோகத்தரால் பரீட்சிக்கப்படல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. |

## 3.11 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கீழே வகைப்படுத்தப்பட்டுள்ள சொத்துக்கள் விளைவற்று அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | திணைக்களத்தின் சொந்தமான சொத்துக்கள் செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. |

| சொத்துக்களின் வகை | அலகுகளின் எண்ணிக்கை | விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட காலம் |
|---|---|---|
| கட்டிடம் | 99 | 03 வருடங்களுக்கு மேல் |
| - மேற்படி - | 25 | 01 வருடத்திற்கு குறைவு 03 வருடங்களுக்கு மேல் |
| மோட்டார் வாகனம் | 124 | 03 வருடங்களுக்கு மேல் |
| இயந்திர பொறிகள் | 342 | 03 வருடங்களுக்கு மேல் |
| - மேற்படி - | 37 | 1 வருடத்திற்கு மேல் 03 வருடங்களுக்கு குறைவு |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (ஆ) | திணைக்களத்திற்குச் சொந்தமான காணி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது 06 நிறுவனங்களின் 100 ஹெக்டேயர் காணியை சட்டரீதியாக கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | திணைக்களத்திற்கு உரித்துக் கூறப்படுகின்ற சகல காணிகளையும் தீர்த்து உரித்தைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | உரித்தைக் கையேற்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. |
| (இ) | ஹொரண பழவகை பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்திற்குச் சொந்தமான நில அளவில் 2.15 ஏக்கர் அளவினை பகுதியொன்று அனுமதியற்ற குடியிருப்பாளர்களினால் பிடித்து வைக்கப்பட்டிருந்த போதிலும், இந்தக் காணியைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | திணைக்களத்திற்குச் சொந்தமானது என உரித்துக் கூறப்படுகின்ற சகல காணிகளும் தீர்க்கப்பட்டு பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். | தற்போது ஹொரண பிரதேச செயலாளருடன் அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அகற்றி காணியைக் கையேற்கும் நடவடிக்கைகள் இடம் பெறுகின்றமையை தயவுடன் அறியத்தருகின்றேன். |
| (ஈ) | 2000 திசெம்பர் 14 ஆந் திகதி தனியார் நிறுவனத்திலிருந்து ரூபா 987,188 தொகையில் கொள்வனவு | நிறுவனத்திற்குச் சொந்தமான சொத்துக்களை | பணிப்பாளர் (விதை மற்றும் பயிர்ச்செய்கைப் |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்ட Hersonber வகையின் விதைகளைப் பொதி செய்யும் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்ட திகதி முதல் 07 மாதங்களின் பின்னர் பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. | உச்ச அளவில் செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்தப்பட வேண்டும். | பொருள் அபிவிருத்தி) இடம் பதில் கோரப்பட்டிருந்தும் இதுவரையிலும் பதில் கிடைத்திருக்க வில்லை. |
| (உ) | குண்டகசாலை பண்ணைக்குச் சொந்தமான பயிரிடக்கூடிய நில அளவு 26.5 ஹெக்டேயர் காணப்பட்ட போதிலும், 2017 சிறுபோகம், 2017/2018 பெரும்போகம் மற்றும் 2018 சிறுபோகங்களில் முறையே 9.02, 4.26 மற்றும் 11.69 ஹெக்டேயர் அளவாக குறைந்த நில அளவே பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

## 3.12 நட்டம் மற்றும் இழப்பு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 மார்ச் 16 ஆந் திகதி இடம்பெற்ற கெப்வண்டி விபத்து தொடர்பாக ஆரம்ப பரிசோதனையில் மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 119,250 தொகையான இழப்பு தொடர்பான இறுதி பரிசோதனையொன்று 2018 யூன் 06 ஆந் திகதி வரையிலும் இடம்பெற்றிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | உடனடியாக உரிய பரிசேதனை சபையை நியமித்து மிகுதி நடவடிக்கைகளை எடுக்குமாறு என்னால் பணிப்பாளருக்கு (நிர்வாகம்) அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 02 வாகன விபத்துக்களுக்குரிய உரித்து கோரமுடியாத படியான கூட்டுத்தொகை ரூபா 24,873 பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது தொடர்பாக நடவடிக்கைகளின் மிகுதிச் செயற்பாடுகள் தொடர்பாக எனது 2019 மே 24 ஆந் திகதிய குர்தெ/மு/8/6/2018/23 ஆம் இலக்க கடிதம் மூலம் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (இ) | பசுமாடுகள் பதிவேட்டின் | நிதிப்பிரமாணத்தின் | பசுமாடுகள் பதிவேட்டில் |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம் 04 வகைகளுக்குரிய 14 பசுமாடுகளின் பற்றாக்குறையானது இனங்காணப்பட்டதுடன் இந்த பற்றாக்குறைக்கு காரணமான விடயங்களை பரீட்சித்து தேவையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 104 இன் பிரகாரம் பரிசோதனையொன்று மேற்கொண்டு நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 14 பசுமாடுகளின் பற்றாக்குறை தொடர்பாக தற்போது பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பணிப்பாளரால் பரவலாக்கம் மற்றும் பயிற்சி எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | 2003 ஆம் ஆண்டின் போது பூங்கா பயிர்ச்செய்கை பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் தாபிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தின் போது பூங்கா விஞ்ஞான ஆராய்ச்சி பண்ணையின் கீழ காணப்பட்ட களஞ்சியத்தின் 58 விளைச்சல் விடயங்களுக்குரிய 3,883 கிலோகிராம் 610 கிராம் அளவும் 25 விடயங்களுக்குரிய 394 விதை இனங்காணப்பட்டிருந்த போதிலும், 2018 ஆகஸ்ட் 28 ஆந் திகதி வரையில்நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் பரிசோதனையை மேற்கொண்டு நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பற்றாக்குறை இனங்காணப்பட்டுள்ள களஞ்சியத்தின் விளைச்சல் விடயத்திற்குரியதாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பரிசோதனை நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக பணிப்பாளர் (பரவலாக்கல் மற்றும் பயிற்சி) இனால் எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (உ) | பிபில பூங்கா பயிர்ச்செய்கை பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தால் பேணிச் செல்லப்பட்ட பதிவேட்டின் பிரகாரம் கடந்த 05 ஆண்டுகளில் இனங்காணப்பட்ட, காலாவதியான கால் நடைகளில் அழிவடைந்த விதை 793 கிலோகிராம் 150 கிராம் தொடர்பாக 2018 ஆகஸ்ட் வரையிலும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் பரிசோதனையினை மேற்கொண்டு நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பணிப்பாளர் பரவலாக்கல் மற்றும் பயிற்சிக்கு பதிலளிக்குமாறு கோரப்பட்டிருந்தும் அதற்காக பதில் கிடைத்திருக்கவில்லை. |
| (ஊ) | அரிதான மரங்களின் பாதுகாப்புக்குரிய கெப் வண்டி 2011 நவம்பர் 23 ஆந் திகதி விபத்திற்கு உட்பட்டமை தொடர்பாக நட்டம் ரூபா 110,143 தொகை நிதிப்பிரமாணம் 105 இன் பிரகாரம் பொறுப்பு | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பணிப்பாளர் (விதைகளை உறுதிப்படுத்தல் மற்றும் அரிதான மரங்களை பாதுகாத்தல்) அவரிடம் பதில் கோரப்பட்டிருந்தும் இதுவரையிலும் பதில் கிடைத்திருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | வாய்ந்த தரப்பினரிடம் இருந்து அறவிடுவதற்கு 2019 பெப்ரவரி 05 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | | |
| (எ) | பழவகைக் கன்று மற்றும் மரக்கறி விதைகளை பாத்திரங்களுக்குரிய கன்றுகள் இறந்து போதல் பதிவேட்டின் பிரகாரம் 2018 சனவரி 01 ஆந் திகதி முதல் 2018 நவம்பர் 30 ஆந் திகதி வரை 79 கன்று வகைக்குரிய ரூபா 758,027 பெறுமதியான சான்றுகள் இறந்திருந்த போதிலும், இது தொடர்பாக முறையான பரிசோதனையொன்று நடாத்தப்பட்டிருக்கவில்லை. | தேவைகளை சரியான பிரகாரம் இனங்கண்டு விதை, கன்றுகளை உற்பத்தி செய்ய வேண்டும். | - மேற்படி - |
| (ஏ) | 2017 ஆம் ஆண்டின் இருப்பு மெய்மையாய்வின் அறிக்கையின் பிரகாரம் ரூபா 41,332,743 பெறுமதியான இருப்புக்கள் நிதிப்பிரமாணம் 104(3) இன் பரிசோதனையின் அடிப்படையில் புத்தகத்திலிருந்து பதிலளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும், சரியான இலக்கு, திட்டம் மற்றும் தேவைகள் உரிய பிரகாரம் இனம் காணப்படாது இருப்பு சேகரிக்கும் உத்தியோகத்தர் தொடர்பாக எடுக்கப்பட்ட வழிமுறைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | தேவைகளை சரியான பிரகாரம் இனங்கண்டு விதை, கன்றுகளை உற்பத்தி செய்ய வேண்டும். | - மேற்படி - |
| (ஐ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு விதைகள் பயிர்ச்செய்கை பொருள் நிலையத்திலும் அதற்குரிய பிரதேச பிரிவுகளிலும் 01 வருடம் முதல் 11 வருட காலத்தை விஞ்சிய ரூபா 4,132,212 தொகையான இழப்பு மற்றும் நட்டங்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் பரிசோதனை | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பரிசோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படவில்லை

**3.13 முகாமைத்துவ நலிவுகள்**

------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கண்டி மாவட்டத்தில் இரண்டு பொறியியலாளர் வேலைத்தளங்கள் நடாத்திச் செல்லப்பட்ட போதிலும், விதை மற்றும் பயிர்ச்செய்கை பொருள் அபிவிருத்தி நிலையத்திற்கு சொந்தமான வாகனத்தை பழுதுபார்த்தல் மற்றும் வாகனத்தை சேவிஸ் செய்தல் வெளி நிறுவனங்கள் மூலம் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டு முதல் 2018 யூன் வரை 39 சந்தர்ப்பங்களின் போது ரூபா 869,235 செலவிடப்பட்டிருந்தது. | பொறியியலாளர் வேலைத் தளங்களின் மூலம் வினைத்திறனான மற்றும் செயற்திறனான சேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பழுதுபார்த்தலை மேற்கொள்வதற்காகவும் தவணை சேவிஸ்களை செய்வதற்காகவும் பொருத்தமான திட்டமொன்றைத் தயாரிக்குமாறு பிரதான பொறியிலாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | கண்ணொருவ விதை மற்றும் பயிர்ச்செய்கை பொருள் விற்பனைக் கடையில் பேணிச் செல்லப்படுகின்ற விளைச்சல் பதிவேட்டின் படி கன்றுகளின் மீதி மற்றும் பௌதீக மீதி என்பவற்றை ஒப்பிடும் போது ரூபா 772,400 பெறுமுதியான கன்றுகள் பற்றாக்குறையும், ரூபா 51,000 தொகையான கன்றுகளின் மிகையும் காணப்பட்டன. | மிகை மற்றும் பற்றாக்குறைகளைக் கண்டறிந்து சரி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மேலும் கணக்காய்விற்கு கன்றுகளை சமர்ப்பிக்கும் போது வகை மாறுபட்டு இருந்தமையால் கணிப்பீட்டு வழு ஏற்பட்டிருந்தமையால் ஒவ்வொரு கன்று வகையிலும் மிகையோ அல்லது பற்றாக்குறையோ ஏற்படவில்லை. |
| (இ) | போம்புவல நெல் ஆராய்ச்சி மற்றம் அபிவிருத்தி நிலையத்தின் ஆராய்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற பிரதேசத்தில் தண்ணீர் வழிந்தோடுவதற்கும் நிர்மாணிக்கப்பட்ட வாய்க்கால் முறையான பிரகாரம் பராமரிக்கப்படாததுடன் அந்த வாய்க்கால்களை ஆக்கிரமிக்கும் வகையில் காடுகள் வளர்ந்து சல்வீனியா மற்றும் ஜப்பான் ஜபர | வளங்களை செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்துவதற்குத் தேவையான பராமரிப்பு நடவடிக்கைகள் காலரீதியில் மேற்கொள்ளப்பட வேண்டும். | ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் தேவையான சந்தர்ப்பங்களின் போது சல்வீனியா மற்றும் ஜப்பன் ஜபர பிரசேதத்திலிருந்து அகற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வளர்ந்து காணப்பட்டது. ஆராய்ச்சிகளின் விளைவுகளுக்காக இந்தத் தாவரங்கள் நேரடியாக தாக்கமளித்திருந்தபடியால் அது தொடர்பான கவனம் செலுத்தப்படவில்லை. | | |
| (ஈ) | திணைக்களத்தில் 03 நிறுவனங்களில் 22 உத்தியோகத்தர்கள் மிகுதி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஆற்றப்பட்ட வேலை அறிக்கை குறித்த பிரகாரம் சமர்ப்பிக்கப்படவில்லை. | எஞ்சிய நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அதற்குரிய செய்யப்பட்ட வேலை அறிக்கை என்பன குறித்த காலத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | குறித்த காலத்தில் மிகுதி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செய்யப்பட்ட வேலை அறிக்கை என்பவற்றை சமர்ப்பித்திருப்பதற்குத் தேவையான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (உ) | இலங்கையில் தோடைப்பயிர்ச் செய்கையில் காணப்படுகின்ற பிரச்சினைகளை இனங்கண்டு அதன் பிரகாரம் ஆராய்ச்சித் திட்டத்தைச் செய்து அமுல்படுத்தி விவசாயப் பிரச்சினைகளுக்கு தீர்வினை வழங்குவதன் மூலம் விவசாய சமூகத்தை வலுப்படுத்துவதற்கு நாட்டின் தோடை உற்பத்தியை கட்டியெழுப்புவதற்கும் தோடை இறக்குமதி செலவினத்தை குறைப்பதற்கும் உள்ள இயலுமை தொடர்பாக திணைக்களம் அவதானம் செலுத்தாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | தோடைப் பயிர்ச் செய்கையில் காணப்படுகின்ற பிரச்சினைகளை இனங்கண்டு அதன் பிரகாரம் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதன் மூலம் உள்நாட்டு உற்பத்தியை உயர்த்தி இறக்குமதி செலவினத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது ஆராய்ச்சிகளின் மூலம் பெறப்பட்டுள்ள முன்னேற்றத்தில் அடிப்படையில் அந்த வலயங்களில் மீண்டும் தோடை பயிர்ச்செய்கை என்பன பரவலாக்கப்பட்டுள்ளது. அதனால் எதிர்காலத்தில் உள்நாட்டு தோடை உற்பத்தி உயர்வடையும். |
| (ஊ) | பிபில் பூங்கா பயிர்ச்செய்கை பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தால் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தும் போது தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் போதியளவின்மை, போதியளவிலான பயிற்சி உத்தியோகத்தர்கள் தரப்பு காணப்படாமை போன்ற பிரச்சினைகளின் காரணமாக நிறுவனத்தால் வழங்கப்படுகின்ற பயிற்சி அளித்தல் காலரீதியான தேவைக்கு ஈடுகொடுக்கும் ஆக்கபூர்வமான பயிற்சி ஒன்றாக இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பயிற்சி நிலையத்தில் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி பயிற்சி உத்தியோகத்தர்களை அதிகரித்தல் போதியளவான பிரகாரம் பயிற்சி உபகரணங்களை வழங்குதல் மற்றும் மாணவர்களின் சுகாதார வசதிகளை விருத்தி செய்வதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பயிற்சி உபகரணங்களைப் பெற்றுக் கொள்ளல், உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி, விடுதிகளை நிர்மாணித்தல், பயிற்சி உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் பயிற்சி பெறுநர்கள் தொடர்பான பின் தொடர் ஆய்வகளைச் செய்தல் நடைமுறை ரீதியில் வசதியீனமாக இருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (எ) | கண்ணொருவ பூங்கா பயிர்ச் செய்கை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தில் இருக்கின்ற சில உத்தியோகத்தர்கள் நியமனம் கிடைத்த திகதி முதல் 15 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் இந்த நிலையத்தில் சேவையில் ஈடுபட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | உத்தியோகத்தர் களுக்கு முறையான பிரகாரம் இடமாற்றம் வழங்குவதுற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த உத்தியோகத்தர்கள் வருடாந்த இடமாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளனர். |
| (ஏ) | இறக்குமதி செய்யப்பட்ட விதைகளுடன் போட்டி இடுவதற்கு முடியுமான வகையில் விவசாயிகளின் தேவைகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் ஆராய்ச்சி திட்டமிட்டு உள்நாட்டில் உற்பத்தி செய்த விளதாருக்கு உள்ள கேள்வியை அதிகரிப்பதற்கு செயற்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | உள்நாட்டு தேவைகளுக்கு ஈடாகும் வகையில் உள்நாட்டின் உற்பத்தி செய்யப்பட்ட மரக்கறி விதைகளுக்காக ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட வேண்டும். | மலைநாட்டு மரக்கறிகளின் விதைகள் எமது நாட்டின் பொருத்தமான இயற்கைக் காலநிலை ஒன்று காணப்படாதிருந்த மையால் எமது நாட்டில் அதனை உற்பத்தி செய்ய முடியாதிருந்திருக்கின்றது. தற்போது இந்த மரக்கறிகளில் 09 இனங்களைப் பயிரிடுவதற்காக விடுவிக்கப்பட்டிருந்ததுடன் இந்த இணம் விவசாயிகளுக்கிடையே பிரபல்யமாக காணப்பட்டது. |
| (ஐ) | திணைக்களத்தின் நுவரெலியா மாநகர சபையுடன் ஒன்றிணைந்து விவசாய சுற்றுலா செயற்திட்டமொன்று சீத்தாஎலிய பண்ணையில் 2014 ஆம் ஆண்டின்போது ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் இதனால் பண்ணையின் வழிகள் கணிசமான அளவு பங்கசு தாக்கத்திற்கு உட்பட்டமை,வீதியின் ஒரு பக்கத்தில் 1.5 மீற்றர் அளவான தூரத்தில் தூசுகள் படிந்திருந்தமையால், அந்த பயிர்ச்செய்கை பிரதேசங்களின் முன்னேற்றம் தடைப்பட்டமை, உருளைக் கிழங்கு பகுதி அங்கவீனம் மற்றும் முழுமையாக படைத்தல் போன்ற நோய் நிலைக்கு உட்பட்டமை, விதை முளைதிறன் குறைவடைந்தமை, உருளைக்கிழங்கு | பண்ணையின் பிரதான நோக்கம் விதை உருளைக் கிழங்கை உற்பத்தி செய்வதற்காக இருந்ததுடன் அதற்காக முன்னுரிமை வழங்கி நடவடிக்கை எடுக்க வேண்டும். | பணிப்பாளர் (விதை மற்றும் பயிர்ச்செய்கைப் பொருள் அபிவிருத்தி) இடம் பதில் கோரப்பட்டிருந்தும் இதுவரையிலும் பதில் கிடைத்திருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | தாவரங்களில் சிறிய எண்ணெய் தழும்பு ஏற்படுதல் மற்றும் விதை உருளைக்கிழங்கு உற்பத்தி குறைவடைதல் என்பன ஏற்பட்டிருந்தன. | | |
| (ஒ) | பெல்வெஹர பிரதி விவசாய பணிப்பாளர் (விதை) பிரிவின் களஞ்சியங்களில் இடவசதிகள் போதியளவில் இல்லாமையின் காரணமாக அந்த பிரிவிற்குரிய விதைகள் 35,000 கிலோகிராம் சீத்தாஎலிய அரசாங்க விதை உற்பத்தி பண்ணைக்குரிய களஞ்சியங்களில் தற்காலிகமாக களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது இந்த விதை இருப்புக்களில் எலிகள் மற்றும் எறும்புகளின் சேதம் ஏற்பட்டிருந்ததுடன் அதற்காக நீண்டகால பாதுகாப்பு வேலைத்திட்டமொன்று அமுல்படுத்தப்படவில்லை. | உற்பத்தி செய்யப்படுகின்ற விதைகள் பாதுகாப்பாக களஞ்சியப் படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | - மேற்படி - |
| (ஓ) | சீத்தாஎலிய பிரதேச பொறியியலாளர் வேலைத்தளத்தில் 2019 பெப்ரவரி 13 ஆந் திகதி வரையிலும் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக கிடைத்து 01 மாதம் முதல் 34 மாதம் வரையான காலம் கடந்திருந்த 14 மோட்டார் வாகனங்களை பழுதுபார்க்கும் நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்படாமல் வாகனத் தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | மோட்டார் வாகனங்களை பழுதுபார்த்தலை வெகுவிரைவில் மேற்கொள்ள வேண்டும். | - மேற்படி - |
| (ஔ) | குண்டகசாலையின் அரசின் விதை உற்பத்தி பண்ணையில் 2017/2018 பெரும்போகத்தையம், 2018 சிறு போகத்தையும் இலக்காகக் கொண்டு விதை உற்பத்தியை பூர்த்தி செய்து கொள்ளும் ஆகக்குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் இந்த முன்னேற்றம் இலக்கிடப்பட்ட விதை உற்பத்தியின் சதவீதமாக 17 சதவீதம் முதல் 61 சதவீதம் | இலக்கிடப்பட்ட விதை உற்பத்திக்காக பண்ணையின் வளங்கள் செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | வரையிலான வீச்சில் காணப்பட்டது. | | |
| (க) | குண்டகசாலையில் அரசாங்க விதை உற்பத்தி பண்ணையில் விதைகளை பெற்றுக் கொள்ளும் எதிர்பார்ப்பில் பயிரிடப்பட்டுள்ள கறிமிளகாய், மற்றும் தக்காளி பயிர்ச்செய்கைக்காக ஈடுபடுத்தப்படுகின்ற துளி நீர் வழங்கல் முறைமை உரிய பிரகாரம் செயற்படாமையின் காரணமாக 1.65 ஹெக்டேயர் பயிரிடப்பட்டுள்ள கறி மிளகாய், தக்காளி மற்றும் கத்தரிக்காக போதியளவான நீரை வழங்குவதற்கு முடியாதிருந்தது. | போதியளவான நீர் வழங்கலை பயிர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | - மேற்படி - |
| (கா) | திணைக்களத்தின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற வானொலி விவசாய சேவை பிரிவின் மூலம் ஒலிபரப்பு நடவடிக்கைகளைச் செய்யும் போது வெளிப் பிரதேசங்களின் விவசாயிகள் மற்றும் அந்த பிரதேசங்களின் விவசாய அலுவலகங்களின் உத்தியோகத்தர்கள் தொடர்பு கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற வானொலி பதிவு செய்வதுடன் தொலைக்காட்சி பதிவுசெய்தலும் ஒதே தடவையில் மேற்கொள்வத்ன மூலம் கிரயத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | செவிப்புல கட்புல பதிவுகளைச் செய்தல் ஒரே சந்தர்ப்பத்தில் இடம்பெறுவனத் மூலம் கிரயக் கட்டுப்பாட்டை மிகவும் செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் வடிவமைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த இரண்டு பணிகளையும் ஒன்றிணைத்து எதிர்காலத் திட்டத்தைத் தயாரிப்பதற்கும், அதன் மூலம் கட்புல செவிப்புல நிகழ்ச்சித்திட்டங்களை மிகவும் செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் வடிவமைப்பதற்கு முடியாதிருந்தது. |
| (கி) | மதுகெட்டிய விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் நாற்று மேடைப் பிரிவில் நிர்மாண நடவடிக்கைகளுக்காக 2016 நவம்பர் 25 ஆந் திகதி ரூபா 195,610 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட குழாய் மற்றும் கம்பிகள் 2018 செப்தெம்பர் வரையிலும் களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டது. | தேவையான சரியான இனங்கண்டு கொள்வனவு மேற்கொள்ளப்படல் வேண்டும். | இந்த பணிகளை எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (கீ) | பழவகை கிராம நிகழ்ச்சித்திட்டம் கீழ் குறித்த காலத்தில் விவசாயிகளுக்கு | கன்றுகளைப் பகிர்ந்தளிக்கும் நிகழ்சித்திட்டத்தை | சில வலயங்களின் காணப்பட்ட சீரற்ற நிலையினால் |

| | | | |
|---|---|---|---|
| | கன்றுகளை வழங்காமல் கடுமையான வரட்சிக் காலத்தில் கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. | வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாக நடாத்துவதற்கு முடியாதிருந்தது. |
| (கு) | சில பழவகை பயிர்ச்செய்கைகளில் விளைச்சல் தருகின்ற வயதில் காணப்பட்ட போதும், விளைச்சல் தராமை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் பெரலிகம மற்றும் பெறகம எலுமிச்சை பழவகை கிராமங்களின் பயிரச்செய்கையில் விளைச்சல் தராதிருந்த போதிலும் அவற்றை நல்ல நிலைக்கு கொண்டு வருதல் தொடர்பாக திணைக்களம் கவனம் செலுத்தி இருக்கவில்லை. | இது தொடர்பாக பரிசோதனையொன்று மேற்கொண்டு விவசாயிகளுக்கு துரிதமாக அறிவுறுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | வளர்ச்சி அடைந்த போதும் விளைச்சல் தராத அற்ற விளைச்சல் தரத்தில் காணப்படுகின்ற குறைபாடுகள் தொடர்பாக இதுவரையிலும் பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக பணிப்பாளர் (பழவகை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி) இனால் எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (கூ) | பழவகைக் கிராம நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விசேடமான ஏற்றுமதி சந்தைக்காக வணிக மட்டத்தில் வாழை பயிரிடுதலை முன்னுரிமையாகக் கொண்டிருந்ததுடன் கடந்த 06 வருட காலத்தில் 400 வாழைக் கன்றுகளையுடைய ஒரு கிராமம் மாத்திரம் 2018 ஆம் ஆண்டு வரையில் தாபிக்கப்பட்டதன் மூலம் அடிப்படை நோக்கம் வீழ்ச்சியடைந்துள்ளது. | செயல் திட்டம் மூலம் எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | செயல் திட்டத்தின் ஆரம்பத்தின் போது பல வருட பயிர்ச்செய்கைக்காக முன்னுரிமை வழங்கி கிராமங்கள் தாபிக்கப்பட்டதுடன் 2018 ஆம் ஆண்டின் போது நடுத்தர கால பயிர்ச்செய்கையான வாழை பயிர்ச்செய்கைக்காக முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. |
| (கெ) | திணைக்களத்திற்குச் சொந்தமான அகற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்ட காலாவதியான கிருமிநாசினி பொருட்கள் 23,112 கிலோகிராம் மற்றும் 2,040 வீற்றல் என்பன காணப்பட்டதுடன் அவற்றை பொருத்தமான பிரகாரம் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி | சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் பொருத்தமான பிரகாரம் கிருமி நாசினி பொருட்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | வரையிலும் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்தது. | | |
| (கே) | மரங்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதற்காக அதனுடன் தொடர்புடைய அல்லது இணைந்துள்ள விடயங்களுக்காக ஏற்பாடுகளை வழங்கும் வகையில் 1999 இன் 35 ஆம் இலக்க மரங்களைப் பாதுகாக்கும் சட்டம் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் மரங்களை உற்பத்தி இறக்குமதி செய்தல் தொடர்பான ஏற்பாடுகள் உள்ளடக்கிய கட்டளை விநியோகிப்பதற்கு 2019 ஏப்ரல் 25 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மரங்களை உற்பத்தி இறக்குமதி செய்தல் தொடர்பான ஏற்பாடுகளை உள்ளடக்கிய கட்டளை விநியோகிக்கப்பட வேண்டும். | இந்த சட்டத்திற்குரிய தேசிய மர விடுவிப்பு சேவை மூலம் புதிய பிரமாணங்கள் தயாரிக்கப்படுகின்றது. இதுவரையிலும் இறுதிக் கட்டத்தில் காணப்படுவதுடன் இறுதி வரைவு அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக பணிப்பாரள் (விதை மற்றும் கரை அபிவிருத்தி) இனால் எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (கை) | இறக்குமதி அனுமதிப்பத்திரம் வழங்குதல் மற்றும் பௌதீக பரிசோதனைக்குரிய இறக்குமதியாளர்களின் பதிவு, பதிவேடுகளுக்கு கொண்டுவரப்படல் மற்றும் அனுமதிப்பத்திரம் விநியோகித்தல் மற்றும் போன்ற திட்டமுறையொன்று கணனி மயப்படுத்தப்பட்ட திட்ட முறையொன்று அமுல்படுத்தப் படாதிருந்ததுடன் பௌதீக பரிசோதனைக்குரிய தகவல்களை உள்ளடக்கிய தரவு முறைமையொன்று துறைமுக வளாகத்தில் தாபிக்கப்பட்டுள்ள மரங்களின் பராமரிப்புச் சேவையில் பராமரிப்புச் செய்யப்பட்ட போதிலும், அந்த முறைமை நாளதுவரையாகப் பேணிச் செல்லப்படவில்லை. | இறக்குமதியாளர்களினால் பதிவு செய்தல், பதிவேடுகளுக்குக் கொண்டுவரல் மற்றும் அனுமதிப்பத்திரம் விநியோகித்தல் போன்ற செயற்பாடுகளுக்காக முறையான திட்டமொன்று பின்பற்றப்பட வேண்டும். | இறக்குமதி அனுமதிப்பத்திரப் பிரிவை உள்ளடக்கிய தேசிய மர பராமரிப்பு சேவையின் சகல பிரிவுகளுக்குமானதுமான தரசுக் களஞ்சியமொன்றைப் பேணிச் செல்லக் கூடிய வகையில் கணின மென்பொருள் முறைமையொன்று தயாரிக்கப்படுவதாக பணிப்பாளர் (விதை மற்றும் மர அபிவிருத்தி) இனால் எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. துறைமுக வளவில் தாபிக்கப்பட்டுள்ள கணனி தரவு முறையை நாளதுவரையாக பேணிச் செல்லப்படுகின்றதா என மேற்பார்வை செய்வதற்கு கொழும்பு துறைமுகத்தின் மர பராமரிப்பு நிலையத்தின் பிரதி பணிப்பாளருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. |

**4. நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் சில நிலையங்களில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுக்கு தொடர்புபடுத்தும் நடவடிக்கை முறை தொடர்பாக உத்தியோகத்தர்கள் போதியளவான அறிவினை கொண்டிருக்காமையால் அதன் பிரகாரம் செயற்பாடுகளை அமுல்படுத்த முடியாதிருந்தமை மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான திட்டங்கள் மற்றும் வழிமுறைகளை எடுத்தல் வேண்டும். | செயற்திறனையும் வினைத்திறனையும் அதிகரித்துக் கொள்வதற்காக தேசிய செயற்திறன் செயலகத்தையும் தொடர்புடைய வினைத்திறன் நிகழ்ச்சித்திட்டத்தையும் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**5. மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்தின் மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 2,184 ஆக இருந்ததுடன் இதில் சிரேஷ்ட மற்றும் மூன்றாம் ஆம் மட்டத்தின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தற்போது காணப்படுகின்ற வழக்கு நடவடிக்கைகள் இடையூறாகக் காணப்பட்டதுடன் வழக்கு நடவடிக்கைகள் இடையூறாகக் காணப்பட்டதுடன் இந்தப் பிரச்சினை நிறுவனத்தின் வினைத்திறனுக்கு நேரடியாக தாக்கமளிக்கக் கூடியதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | துரிதமாக வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை. |
| (ஆ) 1,443 தொழிலாளர்களை சேவையில் ஈடுபடுத்தியதற்காக 2015 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் முகாமைத்துவம் சேவைகள் திணைக்களத்தால் வழங்கப்பட்டிருந்த அங்கீகாரத்தின் பிரகாரம் | | |

| | | | |
|---|---|---|---|
| | முகாமைத்துவத்தைச் செய்து வினைத்திறனாக ஈடுபடுத்துவது தொடர்பில் முகாமைத்துவம் கவனம் செலுத்தி இருக்கவில்லை. | | |
| (இ) | வீரவில விவசாய ஆராய்ச்சி நிலையத்திலும் மதுருகெட்டிய விவசாய ஆராய்ச்சி நிலையத்திலும் சேவையாற்றுகின்ற ஆராய்ச்சி உதவி உத்தியோகத்தர் மற்றும் தொழில்நுட்ப உதவி உத்தியோகத்தர்கள் மற்றும் தொழில்நுட்ப உதவி உத்தியோகத்தர்கள் என்போருக்கு கடந்த 05 ஆண்டு காலத்தில் வழங்கப்பட்டிருந்த பயிற்சி சந்தர்ப்பங்கள் குறைவான மட்டத்தில் காணப்பட்டன. | உத்தியோகத்தர்களின் அறிவு மற்றும் திறன்களை அதிகரிப்பதற்கு தேவையான பயிற்சி அளித்தல் சந்தர்ப்பங்களை வழங்குவதன் மூலம் மனிதவளங்களை செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் ஈடுபடுத்துவதற்கு செயற்படல் வேண்டும். | எதிர்வரும் வருடங்களின் போது உத்தியோகத்தர் களுக்குத் தேவையான பயிற்சி சந்தர்ப்பங்களை வழங்குவதறகு ஆகக்கூடிய முயற்சி எடுக்கப்படுகின்றது. |